DINAMALAR

24 MAR 2022

PAGE 1

# தொலைதூர கல்வி சேர்க்கை 31ம் தேதியுடன் முடிகிறது

**புதுச்சேரி, மார்ச் 24–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் தொலைதூர கல்வி இயக்குனரக மாண வர் சேர்க்கை, வரும் 31ம் தேதியுடன் முடிகிறது.

புதுச்சேரி பல்கலைக் கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் மொத்தம் 20 பட்டப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் எட்டு எம்.பி.ஏ., மேலாண்மை படிப்பு களும் உள்ளன. வழக்க மாக தொலைதூர கல்வி இயக்குனரகத்தில் மாண வர் சேர்க்கை ஜனவரியில் துவங்கும். கொரோனா தொற்று பரவல் காரண மாக இந்தாண்டு மாண வர் சேர்க்கை மார்ச் 1ம் தேதி துவங்கியது. மாண வர் சேர்க்கை வரும் 31ம் தேதியுடன் முடிகிறது. .மாணவர் சேர்க்கை குறித்த மேலும் தகவல்க ளுக்கு https://dde.pondiuni.edu.in என்ற இணைய முக வரியை காணவும்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.